# செந்தமிழ்

தொகுதி :95 திருவள்ளுவர் ஆண்டு 2032 ஆகஸ்ட் 2001 பகுதி : 8

திங்கள் இதழ்

மதிப்புறு ஆசிரியர் இரா. அழகுமலை எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு.நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை | செயலாளர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. மா. சங்கர பாண்டியன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். ந. சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. கே. கந்தசாமி | உறுப்பினர் |
| திரு. வெ. பழனிச்சாமித்தேவர் | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. க.சி. அகமுடைநம்பி | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. அ. சாமிஐயா | உறுப்பினர் |

## செந்தமிழ் ஆசிரியர் குழு

பேரறிஞர். நா. பாலுசாமி
பேரறிஞர். தமிழண்ணல்
பேரறிஞர். செ. கந்தசாமி
டாக்டர். ந. சேதுராமன்
பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி
பேரறிஞர். கதிர். மகாதேவன்
பேரறிஞர். கு. துரைராசு
பேரறிஞர். அ.அ. மணவாளன்
பெரும் புலவர். இரா. இளங்குமரன்
பேரறிஞர். அ. தட்சிணாமூர்த்தி
பேரறிஞர். எஸ்.எம். கமால்
பேரறிஞர். ஈ.கி. இராமசாமி
பேரறிஞர். சே. அரிராமநாதன்
பேரறிஞர். அ.மா. பரிமணம்
திரு. வே. திருவரங்கராசன்

# செந்தமிழ்

திங்கள் இதழ்

THE MADURAI TAMIL SANGAM
மதுரைத் தமிழ்ச் சங்கம்

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| வாணாள் கட்டணம் | ரூ. 500 | ரூ. 2000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |

மதிப்புறு ஆசிரியர் :

**இரா. அழகுமலை** எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

## பொருளடக்கம்

1. திருமூலர் கூறும் சக்தி நிபாதம் .......263
டாக்டர் சுப. அண்ணாமலை

2. அறிவு அனைவருக்கும் பொதுவானதே .....272
சு.கு. பன்னீர் செல்வம்

3. இரகசிய வழியும் மனோன்மணீயமும் .....284
முனைவர் மு. சுயம்பு

4. ஓர் இயற்றமிழ் மாணவனின் கல்வெட்டுப்பார்வை ....295
அ.மா. பரிமணம்

5. மக்களாட்சி வளர்ந்த வரலாறு ......299
பா. சூரியநாராயணன்

# திருமூலர் கூறும் சக்தி நிபாதம்

டாக்டர் சுப. அண்ணாமலை

மெய்ந்நூல் (Philosophy) என்பது பொது. வள்ளுவர் மெய்ந்நூல் கருத்துக்களைக் கூறி உள்ளார்.

"ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்" (குறள்: 370)

என்று வள்ளுவர் மெய்ந்நூல் கருத்துக்களைக் கூறி உள்ளார். வாழ்க்கைக்கு மெய்ந்நூல் கருத்து தேவைப்படுகிறது என்பது மட்டும் அல்ல, இன்றியமையாததும் ஆகும்.

கோடை காலத்திற்குக் குளிர்ந்த அறை, குளிர்ந்த மர நிழல், குளிர்ந்த பானம் தேவைப்படுவது போல, வாழ்க்கையில் வருகின்ற கோடையைத் தணிப்பதற்கு, குளுமையைத் தேடுகிறோம். அதனைத் தெய்வம்தான் தரவேண்டும். அவனை வணங்குவதுதான் வழி. அவன் மீது நம்பிக்கை வர வேண்டும். நம்பிக்கை வந்து விட்டால், மற்றவை அடுத்தடுத்து வரும் அவன்மீது அன்பு வரும்; பக்திவரும்; அறிவு வரும்; அவனைப் பற்றிய அனுபவம் வரும்.

"கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த்
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே"
என்பார் இராமலிங்கர்.

கோடை என்பது வாழ்க்கைக் கோடை. இக்கோடை அனைவருக்கும் பொது. செல்வந்தர், இல்லாதவர், நடுப்பட்டவர் அனைவருக்கும் தொல்லை உண்டு. யாருக்குத் தொல்லை இல்லை.

மாணிக்கவாசகர் இதனை விடம் (விஷம்) என்கின்றார்.

"நல்குரவு என்னும் தொல்விடம் பிழைத்தும்"
(போற்றித் திருவகவல், வரி: 40)

நல்குரவு என்றால் வறுமை. எத்தனையோ வகையான வறுமைகள் இருக்கின்றன. வறுமை - விடம், தொல்விடம் (நஞ்சு). சங்ககாலம் முதல் இன்று வரை நம்மிடம் வறுமை இருக்கின்றது.

திருவள்ளுவர் வறுமையை நெருப்பு என்றார்.

"நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதொன்றும் கண்பாடு அரிது" (குறள் 1049)

நெருப்பு சுட்டு விட்டுவிடும். ஆனால் விடமோ தலைக்கு ஏறி, உயிரை வாட்டி வதைத்துவிடும். மணிவாசகர் செல்வத்தை அல்லல் என்றார்.

"செல்வம் என்னும் அல்லலில் பிழைத்தும்"
(போற்றித் திருவகவல் - வரி 39)

அல்லல் என்றால் பிடுங்கல். இது மிக மோசமானது. இந்த இரண்டும் தொல்லை ஆகும்.

இவற்றில் இருந்து விடுபடுவதற்குரிய வழியை - ஆறுதலை மனிதன் எங்கே பெறுவான்? மெய்ந்நூல் கருத்துக்களில்தான் ஆறுதல் பெறுவான்.

சத்தி நிபாதம் - இது வடமொழிச் சொல்."அண்ணிக்கும் பெண்பிள்ளை" என்று இதற்கு ஏற்ற தமிழ்ச் சொல்லாகத் திருமூலர் கூற்றில் தரப்பட்டுள்ளது.

'அண்ணித்தல்' என்றால் குளிர்தல்.
உயிருக்குக் குளிர்ச்சி தருவது யார்?
அண்ணிப்பவள் யார்?

மணிவாசகர், 'அண்ணிப்பான் தாள் வாழ்க' என்கின்றார் (சிவபுராணம்வரி4)

இறைவன் வேறு, அம்மை வேறு அல்ல. சைவத்தில் அப்பன் தான் அம்மையாக வருகிறான். அவன் தாயுமானவன். குழந்தையின் பசி அறிந்து பக்குவம் அறிந்து, அன்போடு அருள் செய்கிறான். இறைவன்தான் அம்பிகை

சூரியன் போல இறைவன்;
கதிர் போல அம்பிகை

சூரியன் அங்கே இருக்கிறது. அது இங்கே வருவது இல்லை. கதிர்கள் அங்கிருந்து புறப்பட்டு இங்கு வருகின்றன. சூரியன்தான் ஒளி தருகின்றான். அதன் கதிர்கள் அந்த ஒளியை இங்கே வந்து சேர்க்கின்றன.

அவன் இருக்கின்றான்;
சக்தி இயங்குகிறாள்.

எது எது இயக்கமோ, அது சக்தி எனப்படுகிறது. எத்தனையோ சக்திகள் உள்ளன. சக்திதான் அறிவாற்றல். எனவேதான் சர்வம் சக்தி மயம் என்றார்கள். அவள் இல்லாமல் இந்த உலகம் இல்லை. இது அவளால் வந்த ஆக்கம். முழு வாழ்க்கையும் அவளால்தான் வந்தது.

சிவமே என்று அவன் சும்மா இருக்கிறான்
செய்வது எல்லாம் அவள்தான்

விருப்பங்களை உருவாக்குவது இச்சா சக்தி எனப்படும். செயலாக இருக்கின்ற சக்தி, கிரியா சக்தி எனப்படும். அறிவாகச் செயல்படுகின்ற ஆற்றல் ஞான சக்தி எனப்படும்.

பல நிலைகளில் சக்தி வேலை செய்கிறது. அதில் மிகவும் முக்கியமான வேலை அண்ணிக்கும் வேலை ஆகும். அது பற்றி இங்குப் பார்ப்போம்.

மனிதர்களில் பல தரம் இருக்கின்றனர்
பல படிநிலைகள் உள்ளன.

ஒரே வகையான இறை எண்ணம் உலகத்தவரிடம் கிடையாது. சிலர் தொழுவார்கள், சிலர் அழுவார்கள். சிலர் பாடல்களைப் பாடிக் கொண்டு தூங்காமல் இருப்பார்கள். அது அவரவர் பக்குவ நிலையைக் குறித்து நிற்கிறது.

வாழ்க்கை என்பது பெரும் பயணம், நெடும் பயணம். நெடும் பயணத்தில் மனிதர்கள் மனத்தில் பல்வேறு விளைவுகள் உண்டாகின்றன. முன் பிறவியில் நாம் எப்படி இருந்தோமோ, அதற்குரிய விளைவுகளை இப்பொழுது அனுபவிக்கிறோம்.

"வினை விளை காலம் ஆதலின்"
என்பார் இளங்கோவடிகள்

எத்தனையோ பிறவிகள் எடுக்கிறோம்
"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்" (சிவபுராணம்)
என்றார் மணிவாசகர்

பல பிறவிகள் எடுக்கின்ற என்னை, என்ன என்று சொல்வது? புழுவாக இருந்த நான், இப்பொழுது மனிதன். எனக்கு ஒரு பெயர் வேண்டும். அதுதான் ஆன்மா. தமிழில் உயிர் என்று பெயர். உயிர் என்று கூறுவது பொருந்தாது, உடலில் மூச்சு இருக்கின்ற வரைதான் உயிர் இருக்கும். உடலை விட்டு நீங்கிவிட்டால் மூச்சு நின்று விடும். அதனை 'ஆ' என்றார்கள். சங்க இலக்கியம், ஐங்குறுநூறு - மருதத்திணை முதற்பாடலில் ஆதன் என்ற சொல் வருகிறது. ஆன்மா என்ற பொருளில் வருகிறது. ஆங்கிலத்தில்Adam என்பர். இந்த ஒப்புமை நோக்கற்பாலது.

பல பிறவிகள் எடுக்கின்ற ஆன்மாவில்
பல படிவுகள் உள்ளன.

படிவு - வாசனை - எண்ணம் - விளைவு எனலாம். ஆங்கிலத்தில் (Impression)எனலாம். ஆன்மாவில் படிந்து வருகின்ற, உணர்வுகளின் நுண் அலைகள் (sensivity)என்று கூறலாம்.

அறிவின் தரம் பலவாறாக இருக்கின்றது. திருஞானசம்பந்தர்

மூன்று வயதில் பாடி இருக்கின்றார். இந்தியா வந்த பில் கிளிண்டனுடன், மும்பையில் கணிப்பான் அறிவியலில் தேர்ச்சி பெற்ற சிறுவன் உரையாடி இருக்கிறான். இது அவரவர் அறிவின் தரத்தைக் குறித்து நிற்கின்றது.

இன்ப துன்ப விளைவுகள் அறிவைப் பாதிக்கின்றன. துன்ப அலைகள் மாணிக்கவாசகரைத் தாக்கியிருக்கின்றன.

"தனியனேன் பெரும்பிறவிப் பௌவத்து எவ்வத்
தடந்திரையால் எற்றுண்டு" (திருவாசகம் - திருச்சதகம்: 27)

இது அறிவைப் பாதிக்கின்றது. இதனால் அறிவில் ஒரு மறைப்பு ஏற்படுகிறது. சைவ சமயம் இதனை ஆணவமலம் என்கின்றது.

ஆன்மாவோடு ஆணவமலம் சேர்ந்து இருக்கின்றது. இதன் காரணமாக அறிவில் ஒரு மறைப்பு உருவாகிறது. இது ஞான திரோதானம் (அறிவை மறைக்கும் திரை) எனப்படுகிறது. அந்த அறிவு நிலைக்கு ஏற்பத்தான் இன்ப துன்பம் வரும். அதனை இப்பொழுது அனுபவிக்கிறோம். இதனை நம் அறிவால் அறிய முடியாது. ஆணவ மலத்தின் தன்மை அத்தகையது. ஆணவ மலம் தன்னையும் காட்டாது, பிற பொருளையும் காட்டாது.

"ஒரு பொருளும் காட்டாது இருள், உருவம் காட்டும்
இரு பொருளும் காட்டாது இது" (திருவருட்பயன் - 23)

என்பது ஆணவ மலம் பற்றி, உமாபதி சிவாச்சாரியார் கூறும் கருத்து.

சாலையில் உள்ள தார், அருகில் உள்ள வண்டியில் கனமாக ஒட்டிக் கொள்கிறது. தாரை எளிதில் நீக்க முடியாது. தாரை உருக வைத்துத்தான் நீக்க வேண்டும். ஆணவ மலம் உயிரைப் பற்றி இருக்கும் தார் போன்றது. அது நீங்க வேண்டும் என்று அம்பிகை நினைக்கின்றாள். உடனே அது நீங்காது.

மனித வாழ்க்கையில் இறைவன் நேரடியாகத் தலையிடுவதே

இல்லை. மனிதனுக்கு அறிவு நூல்கள், அற நூல்கள் தரப்பட்டு இருக்கின்றன. அவன் மரபுகளையும், உலக நடைமுறைகளையும் தெரிந்திருக்க வேண்டும். தனியாக யாருக்கும் இறைவன் வரமாட்டான். விண்ணப்பித்தால் வருவான்.

"இம்மை யேதரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர்கெட லுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுற வில்லையே"

என்பது சுந்தரர் திருப்பாட்டு.

இறைவனிடம் அன்போடு, உருக்கத்தோடு, பக்தியோடு கேட்க வேண்டும். அவன்தான் தரவேண்டும் என்று கேட்க வேண்டும்.

திருஞானசம்பந்தர் தேவாரத்தில் ஒரு காட்சி. திருமருகல் பதிகம்.

கன்னிப்பெண், தன் மாமனுடன் உடன்போக்குச் செல்கிறாள். சென்ற இடத்தில் மாமன், அரவம் தீண்டி இறந்து விடுகிறான். நிர்கதியாக நிற்கிறாள். அந்த வழியாக வந்த திருஞானசம்பந்தர், அப்பெண்ணின் துயர் துடைக்கிறார். மாமன் உயிர் பெறுகிறான்.

இறைவனை நினைக்கச் செய்கின்ற துன்பம்தான் மலபரிபாகம். மாணிக்கவாசகர் இவ்வுலகத் துன்பத்தில் சிக்கிக் கதறுகிறார். அவனையன்றி வேறு துணை கிடையாது என்று அழுகிறார்.

"இனியென்னே உய்யுமாறு என்று என்று எண்ணி
அஞ்செழுத்தின் புணை பிடித்துக் கிடக்கின்றேனை"

இதுதான் சத்தி நிபாதம். ஆண்டவன்தான் துணை, சரண், புகல் என்று எண்ண வேண்டும். அவன்தான் அந்தத் துன்பத்தை நீக்க வேண்டும் என்று அவனையே முழுமையாக நம்புவது. மலம் நீங்குவதற்காக வந்த துன்பம் இது.

இன்பம் இன்பம் என்று நினைத்துக் கொண்டு இருக்கும்

இந்த வாழ்க்கை துன்பம் துன்பம் என்று தெரியவருகின்றது. இறைவனை நினைக்க வைக்கின்ற துன்பம், மலபரிபாகம் எனப்படும். துன்பமாகக் காட்டப்பட்ட இதனைத் திருமூலர் இன்பமாகக் காட்டுகிறார்.

"இருட்டறை மூலை யிருந்த குமரி
குருட்டுக் கிழவனைக் கூடல் குறித்து
குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி
மருட்டி யவனை மணம்புணர்ந் தாளே" (திருமந்திரம் 1499)

இருட்டறை மூலையில் அவள் இருக்கின்றாள். இவன் தேட வேண்டும். இவனுக்குக் கூச்சம்,அறியாமை காரணம். கண் இருக்கிறது; அறிவு இல்லை. அவள் அவனைக் கூட விரும்பினாள். அவனை மருட்டுகிறாள். அவனுக்கு விழிப்பு வந்து விட்டது. பின்னர் அவர்கள் வாழ்க்கை அருள் மயமாக அமைந்து விட்டது.

தமிழில் ஒட்டணி என்று சொல்வார்கள். ஒரு பொருளை வெளிப்படையாகக்கூறி, அதனுள் மற்றொன்றை வைப்பது ஒட்டணி எனப்படும். ஆங்கிலத்தில் இதனை Imagery என்பர்.

இருட்டறை என்பது நம் வாழ்க்கை. ஐந்து புலன்களோடு கூடியது.

"மலஞ்சோரும் ஒன்பது வாயிற்குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய"-

என்பது திருவாசகம்

மூலை என்பது மூலாதாரம். சக்தி அந்த மூலையில் இருக்கிறாள். அவள் இருப்பது நமக்குத் தெரியாது. ஆகவே அதைத் 'திரோதான' சக்தி என்பர்.

மாணிக்கவாசகர்,

"பேதித்து நம்மை வளர்த்து எடுத்த" என்பார். இவ்வுலக வாழ்க்கையில் இன்ப துன்பத்தை அனுபவித்தால்தான் மலம்

குறையும். மலம் சடப்பொருள்தான். அந்த மலம் நீங்க வேண்டும் என்றால், அறிவில் ஒரு திருப்புமுனை வரவேண்டும். துன்பப்படவேண்டும். இறைவன் மீது அன்பு வர வேண்டும்.

இறைவன் தனக்கு வழங்கிய எல்லை இல்லாத கருணையை நினைந்து நினைந்து ஏங்குகிறார் மாணிக்கவாசகர். நாய்க்குச் செல்வம் கிடைத்தது போலத் தனக்கு அவன் அருள் கிடைத்தது என்கின்றார்.

“நோயுற்று மூத்துநான் நுந்துகன்றாய் இங்கிருந்து
நாயுற்ற செல்வம் நயந்தறியா வண்ணமெல்லாம்
தாயுற்று வந்தென்னை ஆண்டுகொண்ட தன்கருணைத்
தேயுற்ற செல்வதற்கே சென்றூதாய் கோத்தும்பி”

(திருவாசகம் - திருக்கோத்தும்பி: 110)

இவ்வுலகில் இறைவன் ஒருவனைத் தவிர வேறு உறவு எவரும் கிடையாது என்ற தெளிவு பிறக்க வேண்டும். உலகியல் உறவுகள் இறுதிவரை வருவதில்லை. இதனைத் திருநாவுக்கரசர்,

“எத்தாயர் எத்தந்தை எச்சுற்றத்தார்
எம்மாடு சும்மாடாம் எவர் நல்லார்
செத்தால் வந்து உதவுவார் ஒருவர் இல்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்”

அவன் பாதத்தை உறுதியாகப் பற்ற வேண்டும் என்கிறார். அந்த உணர்வைச் சத்தி நமக்குத் தரும்நிலை தான் ‘சத்தி நிபாதம்’ என்று அழைக்கப்படுகிறது. உயிர்கள் மாட்டு, இச்செயல் நடந்து கொண்டே இருக்கிறது. இதனால் எல்லையில்லா இன்பத்தை உயிர் துய்க்கிறது. தேனாக - பாகாக - ஆனந்தத்தை அள்ளித் தருகிறாள்.

“அண்ணிக்கும் பெண்பிள்ளை, அப்பனார் தோட்டத்தில்
எண் நிற்கும் ஏழ் ஏழ் பிறவி உணர்விக்கும்
உள் நிற்பது எல்லாம் ஒழிய, முதல்வனைக்
கண்ணுற்று நின்ற கனி அது ஆமே” (திருமந்திரம்:1508)

அண்ணிக்கும் பெண்பிள்ளை என்பது அம்பிகை. அப்பனார் தோட்டம் என்பது இந்த உலகம். எண் நிற்கும் ஏழேழ் பிறவி என்பதற்கு எண்ணத்தால் தொடர்ந்து வருகின்ற பிறவிகள் என்பது பொருள். அதன் பிறகுதான் உணர்வு தருகிறாள். உள்ளே உள்ள அழுக்குகளான ஆணவம், கன்மம், மாயை, அறியாமை போன்ற அழுக்குகளை நீக்குகிறாள். இறுதியில் முதல்வனைக் காட்டுகிறாள். அம்மைதான் அப்பாவைக் காட்ட வேண்டும்.

1. இறைவனைப் பார்த்தல் - சத்தி நிபாதத்தில் மந்த தரம்
2. இறைவனை அணுகுதல் - மந்தம்
3. இறைவனை நெருங்குதல்- தீவிரம்
4. இறைவனை அடைதல் - தீவிர தரம்

இந்தப் படிநிலைகள் அனைத்தையும் அம்மைதான் செய்கிறாள்.

மாணிக்கவாசகர் "நமச்சிவாய வாழ்க" என்று பாடுகின்ற முதல் பாடலிலேயே அதி தீவிர பக்குவத்தைப் பெற்றுவிட்டார்.

"கண்ணுதலான் தன் கருணைக் கண்காட்ட வந்து எய்தி" அவனது கருணைக் கண்தான் அருள். இதனைத்தான் மாணிக்கவாசகர், கண்ணுதலான் தன் கருணைக் கண்ணால் காட்டினான் என்கின்றார். மாணிக்கவாசகர், ஆண்டவன் பெயரால் கூறுகின்றார். திருமூலர் அம்பிகை பெயரால் கூறுகின்றார். அபிராமி பட்டர் 'எல்லாம் அம்பிகை' என்கின்றார். திருஞான சம்பந்தர் அவனைப் பார்த்தேன் என்கின்றார்.

"பீடுடைய பிரம்மாபுரம் மேவிய பெம்மான் இவனன்றே "என்கின்றார்.

இறுதியில் இறைவனைக் கண்ணுற்று அவனாகவே ஆகி விடுவது, வீடுபேறு.

"சித்தமலம் அறுவித்துச் சிவம் ஆக்கி எனை ஆண்ட" என்பது மணிவாசகரின் அனுபவ நிலை. இறைவனோடு ஒன்றிக் கலந்த இன்பநிலை. அதுதான் சன்மார்க்கம், காதல் மார்க்கம், ஞானமார்க்கம். திருக்கோவையார் முழுவதும் இந்த மார்க்கம்தான் பாடப்படுகிறது.

காதலன் காதலி ஆகிவிட்டான்
காதலி காதலன் ஆகி விட்டாள்.

# அறிவு அனைவருக்கும் பொதுவானதே

- சு.கு.பன்னீர் செல்வம்

கடந்த ஆண்டு தொடர்கல்விக்கான யுனெஸ்கோ விருதைக் கேரள மாநில அரசு தட்டிச் சென்றுவிட்டது. முழுப்பெருமையும் அம்மாநிலத்தின் 'மாநில எழுத்தறிவு இயக்கத்திற்கே' சாரும். கேரள மாநிலத்தில் எர்ணாகுளம் மற்றும் கோட்டயத்தில் மட்டும் நூற்றுக்கு நூறு எழுத்தறிவு பெற்றவர் உள்ளனர். அவர்களால் எப்படி இவ்வாறு சாதிக்க முடிந்தது என்று நாம் எல்லோரும் கண்ணுங்கருத்துமாக ஆராய வேண்டிய கடமைப்பட்டுள்ளோம்.

எர்ணாகுளம் மாவட்டத்தில் 'கேரள மக்கள் அறிவியல் இயக்கம்' மாவட்டத்தில் கல்லாதவர்கள் இல்லை என்ற நிலையை எட்ட வேண்டும் என்ற குறிக்கோளோடு மக்கள் இயக்கம் ஒன்றை, மக்கள் முகாம் ஒன்றை நடத்தியது. ஆயிரக்கணக்கான தன்னார்வத் தொண்டர்களின் உதவியால் பாடல்கள், தெருக்கூத்துக்கள், பொதுக்கூட்டங்கள், சுவரொட்டிகள், ஊர்வலங்கள் என எல்லாவகையிலும் எழுத்தறிவின் அவசியத்தை வலியுறுத்தியது. கற்றுக் கொள்ள விரும்பியவர்கள் 1989ம் ஆண்டு சனவரி 26 அன்று எர்ணாகுளத்தில் கூடினர். அறிவும் உணர்வும் கலந்த ஒரு பெருங்கூட்டம் திரண்டது. 1,74,000 பேரில் 1,35,000 பேர் பயிற்சியில் பங்கு கொண்டனர். கற்பிக்க வந்தவர்களில் பெரும்பாலோர் ஆசிரியர்களே. எனினும் கற்பவர், கற்றுக்கொடுப்பவர் என்று வேறுபடுத்திக் கொள்ளாமல் ஒருவருக்கொருவர் தங்கள் மனதில் உள்ளதைப் பகிர்ந்து கொண்டதால் குறைநிறைகளை உணர்ந்து கற்றலும் கற்பித்தலும் மிகப் பயனுள்ள முறையில் வியக்க வைக்கும் அளவில் நடந்தது கண்டு இந்தியா முழுவதும் அதன் தாக்கம் உணரப்பட்டது. கற்க வந்த பாமரர்களுக்குப் படித்தல், எழுதுதல், கூட்டல் கழித்தல் போன்ற எளிய கணக்குள் போன்றவற்றோடு உடல் நலம் பேணல், சுகாதாரம், நோய்த்தடுப்பு முறைகள் ஆகியவை

பற்றியும் எடுத்துக் கூறப்பட்டது. இந்தியாவில் 'கோட்டயம்' மாவட்டம்தான் முதன் முதலில் முழு எழுத்தறிவிற்கான பரிசை வென்றது. இதற்கு முழு ஊக்கமும் ஆக்கமும் வழங்கிய பெருமை அன்றைய கோட்டம் மாவட்டத்தின் இளம் மாவட்ட ஆட்சியர் (Collector) என்றால் மிகையன்று. கேரளாவில் எல்லோரும் எழுத்தறிவு பெற்றவர்கள் என்ற நிலை 1991ல்தான் ஏற்பட்டது. ஆனால் தற்போது இந்தியாவிலே அதிகம் படித்தவர்கள் உள்ள மாநிலம் மிசோரம் எனின் சிலர் நம்ப மறுக்கலாம். ஆனால் உண்மை.

யுனெஸ்கோவினால் 'வாழ்வதற்குக் கற்றல்'(LEARNING TO BE) என்ற அறிக்கை வெளியிடப்பெற்றது. அதில் 'கல்வி என்பது அறிவையும் ஆற்றலையும் அன்றாடம் மேம்படுத்தும் தொடர் முயற்சியாகும். தனி மனிதனின் ஆளுமையை வளர்ப்பதோடு மட்டுமல்லாமல் பல்வேறு மனிதர்களோடும் குழுக்களோடும் பல நாடுகளோடும் உறவாடி வளரும் பண்பையும் பேண வேண்டும்' என்று குறிப்பிட்டிருக்கிறது. கேரளாவில் முழு எழுத்தறிவு இயக்கம் முழு முனைப்போடு செயல்பட்டுக் கொண்டிருந்தபோது நடந்த ஒன்றைக் குறிப்பிட்டால் வேடிக்கை என்றே நினைப்பீர்கள். ஆனால் உண்மை. கற்க வந்திருந்த மாமியாரும் மருமகள்களும் கற்றல் பயிற்சியின் போது தத்தம் குறைகளை, தவறுகளை மனம் விட்டுப்பேசி ஆறுதல் பெற்று ஒற்றுமையோடு வாழ்வோம் என்று உறுதி கொண்டது பெருமைப்படத்தக்கதல்லவா? கற்றலினால் இவ்வளவும் விளைகிறது.

கல்வியின் நோக்கம் படித்தல் எழுதுதல் சில வரவுகளைக் கணக்கிடுதல் மட்டுமல்ல. அன்றாட வாழ்வில் அனைத்து அம்சங்களிலும் ஆர்வமோடு அக்கறையோடு ஈடுபடுதலுமாகும். 'தான் தற்போது எந்த நிலையில் இருக்கிறேன்? இதற்குக் காரணம் என்ன? மேலும் முன்னேறுவதற்கு என்ன வழி?' என்று ஒவ்வொரு மனிதனும் எண்ணிப் பார்க்க வேண்டும் கல்வியும் கற்றலும் பொருளாதார மேம்பாட்டிற்கான ஆற்றலை உருவாக்க உதவ வேண்டும். தேசிய ஒருமைப்பாடு, சுற்றுச்சூழல் கருதுதல், சிறு

குடும்பமே சீரான வாழ்விற்கு வழி வகுக்கும் என்று ஏற்றுக் கொள்ளுதல் - இவைகளெல்லாம் தூண்டுவதுதான் கல்வியின் முழு நோக்கமாகும் என்று தேசிய எழுத்தறிவு இயக்கம்(National Literacy Mission) கூறுகிறது.

கற்பதற்கு உகந்த வாய்ப்புகளை உருவாக்கித் தந்து மக்கள் அனைவரும் கற்றுத் தமக்குத் தாமே உறுதுணையாக விளங்க வைக்க வேண்டும். கற்பதற்கு வாய்ப்புகளை ஆசிரியரும் பிறரும் ஏற்படுத்திக் கொடுத்தாலும் அவற்றைப் பயன்படுத்தி முன்னேற வேண்டியவர்கள் கற்பவர்களே. கற்பவர்களிடம் நாட்டமில்லையெனில் பயன் இல்லை.

சென்ற நூற்றாண்டில் சிறந்த கல்வியாளராக விளங்கிய (Paulo Freire) என்பார், "கற்பதற்கு வாய்ப்புகள் மறுக்கப்பட்டுப் புறக்கணிக்கப்பட்ட மக்களிடம் கல்வி சென்றடைய வேண்டும். அவர்களிடம் தம்மை ஆள்பவரைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். தாம் ஒரு அங்கமாக உள்ள சமுதாயத்தைப் பற்றிய அக்கறையோடு கூடிய ஈடுபாடு வேண்டும். அப்போதுதான் ஆசிரியரும் மாணவராகும் நிலை ஏற்படும். கற்பவரும் கற்பிக்க முன்வருவர். அதனால் அறிவு பெறுதல் என்பது ஒரு சிலருக்கே உரியது என்ற எண்ணம் மறையும்" என்று கூறினார். பிறரோடு கலந்துறவாடாமல் தம்மில் தாமே புதைந்து கொண்டு வெம்பிய சமுதாயக் குழுக்களும் தனி மனிதர்களும் எல்லோரோடும் பழகுவதற்கான வாய்ப்பை நல்ல கல்வி மட்டுமே வழங்க முடியும்.

கேரளத்துப் பெண்களின் கல்வி வளர்ச்சியில் அரச குடும்பங்களுக்குப் பெரும்பங்கு இருந்ததாக வரலாறுகள் எடுத்துரைக்கின்றன. ஆள்பவர்கள் மாறி மாறி வந்தாலும் கல்வி வளர்ச்சியில் வளர்ப்பதில் எல்லோருமே ஆர்வம் காட்டி வரவு செலவுத் திட்டத்தில் எல்லோருமே கல்விக்கென்று தாராளமாக நிதி ஒதுக்கீடு செய்து வந்தனர். உடல்நலம் பேணல், பொருளாதார வளர்ச்சிப் பணிகள், சமுதாய மேம்பாட்டுத் திட்டங்கள் எனப் பல்வேறு பணிகள் சமுதாய மேம்பாட்டுத் திட்டங்கள் எனப்

பல்வேறு துறைகளுக்குப் பணம் ஒதுக்க வேண்டியிருந்தாலும் கல்வி வளர்ச்சியில் அக்கறை குறையாமலும் குன்றாமலும் காத்து வந்தனர். இந்தியாவின் தனி நபர் வருமானம் உலக நாடுகளோடு ஒப்பிடும் போது மிகவும் குறைவாக இருந்த போதிலும் கேரளத்து மக்களின் வாழ்க்கைத்தரம் சிறப்பாகவே இருந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும். கேரள மண்ணில் (KSSP of Kerala Assoiciation for Non -Formal Education) முறைசாராக் கல்விக்கென இருந்த தொண்டு நிறுவனங்கள், கழகங்கள், நூலகங்கள் வாயிலாகக் கல்வி வளர்ச்சிக்கும் சமுதாய மற்றும் அரசியல் விழிப்புணர்வுக்கும் வழி வகுத்தன. எந்த வித ஆரவாரமும் ஆர்ப்பாட்டமும் இன்றிச் சிக்கனமாக இவைகள் களப்பணியாற்றின. வீடுகள்தோறும் சென்று கதவுகளைத்தட்டி எழுப்பிக் கற்கச் செய்தனர். ஊரின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் சென்று கல்வியை ஊட்டினர். தேடிச் சென்று வாரி வழங்கினர். இத்தகைய முயற்சிகளால் இம்மாநிலத்து மக்கள் நற்பயன் பெற்று வருகின்றனர். இன்னும் எட்ட வேண்டிய மக்கள் இருக்கின்றனர்.

NSSO. 1997ம் ஆண்டிற்கான அறிக்கையில் பின்வரும் புள்ளி விவரங்களைத் தந்துள்ளது.

1. இந்தியாவில் மிசோராம் மக்களில் 95 விழுக்காடு பேர் எழுத்தறிவு பெற்றுள்ளனர். கேரளாவில் 93 விழுக்காடு பேர் எழுதப் படிக்கத் தெரிந்தவராக இருக்கின்றனர்.

2. 1980-1990ம் ஆண்டுகளில் கல்வி வளர்ச்சி 10 விழுக்காடு ஆகும். 1970-1980களில் வளர்ச்சி விகிதம் 8.5 விழுக்காடு மட்டுமே. இன்னும் குறிப்பாகக் கூறினால் 1995 ஜூலை முதல் 1997 டிசம்பர் வரையுள்ள காலக்கட்டங்களில் கல்வி வளர்ச்சி விகிதம் மிகவும் வேகமாகக் காணப்பட்டது.

3.இக்காலகட்டங்களில் கிராமங்களுக்கும் நகரப் பகுதிகளுக்குமிடையே கல்வி வளர்ச்சியில் பெரிய இடைவெளியும் வீழ்ச்சியும் ஏற்பட்டது. 4.4விழுக்காடு வீழ்ச்சி வேறுபாடு புலப்பட்டது.

4. National Literacy Mission (NLM) ஆய்வறிக்கையின் படி 15-35 வயதினருக்கு இடையே கல்வி வளர்ச்சி சீராக இருந்தது. மேலோங்கி வந்தது. இது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

5. 1991 - 1997ம் ஆண்டுகளில் இந்தியப் பெண்களின் கல்வி வளர்ச்சி 11 விழுக்காடு ஆகும். அதே வேளையில் ஆடவர் கல்வி வளர்ச்சி 9 விழுக்காடு மட்டுமே. இன்று வரையிலும் மகளிரே கற்பவர் வரிசையில் முன் நிற்கின்றனர்.

6. இராஜஸ்தானில் 1991ல் கற்றவர் 38.5 விழுக்காட்டினர் இருந்தனர். ஆனால், 1997ல் 55 விழுக்காடு சட்டென்று உயர்ந்தது பாராட்டத்தக்கதாகும். பீகாரில் 38.5 விழுக்காடு இருந்தது 49 விழுக்காடாக உயர்ந்தது. மத்தியபிரதேசத்தில் 44.2 விழுக்காடு, 56 விழுக்காடாக உயர்ந்தது. இமாசலப் பிரதேசத்தில் 63.9விழுக்காட்டிலிருந்து 77 விழுக்காடாக வளர்ந்தது. இமாச்சல மாநிலம் இந்திய மாநிலங்களில் மூன்றாவதாக இருக்கிறது.

தற்போதுள்ள நிலவரப்படி கல்வி வளர்ச்சிப் பணிகள் தொடருமானால் இந்தியாவின் ஒட்டுமொத்த எழுத்தறிவு சதவீதம் 2000-2006 ஆண்டுகளுக்குள் 75 விழுக்காடாக உயர்ந்து விடும் என்பதில் ஐயமில்லை. முன்பு எதிர்பார்த்ததைப் போல் 2011 வரை காத்திருக்க அவசியமில்லை. தற்போதைய சராசரி எழுத்தறிவு வளர்ச்சி விகிதம் 2 விழுக்காடு. இக்கணக்குப்படி 2001 மக்கள்தொகை கணக்கெடுப்பின் போது இந்திய மக்களின் எழுத்தறிவு 66 விழுக்காடுமுதல் 68 விழுக்காடு வரை இருக்கும்.

NLM எழுத்தறிவு தேவைப்படும் இடங்களைக் கணக்கெடுத்துக் கொண்டு அவ்விடங்களுக்கான திட்டங்களைத் தீட்டி எழுத்தறிவு இயக்கத்தை முனைப்போடு செயல்பட வைக்கிறது. இடம், தேவைப்படும் காலம், தொண்டர் எண்ணிக்கை, ஆகும் செலவு, பெறும் பயன் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மாவட்டம் மற்றும் கோட்டம், உட்கோட்ட நிர்வாகங்களின் துணையோடு மாவட்ட ஆட்சியரின் முழு ஒத்துழைப்பில் NLM நன்கு, இனிய முறையில் செயல்படுகிறது. நேரு யுவ கேந்திரா, (NYK) NSS. இன்னும் பிற ஊழியம் புரியும் தொண்டு நிறுவனங்களும் NLM உடன்

ஊழியம் புரியும் தொண்டு நிறுவனங்களும், NLM உடன் இணைந்து பணியாற்றுகின்றன. எழுத்தறிவு மட்டுமின்றி வருவாய் ஈட்டி வாழ்வதற்கான தொழில்சார் கல்வியும் வழங்கப்படுகின்றது.

1986ல் தேசியக் கல்விக்கொள்கை (National Education Policy) அறிவிக்கப்பட்ட பின்னர் 1988ல் NLM தோற்றுவிக்கப்பட்டது. இது ஆள்வோரின் ஆர்வத்தைக் காட்டுவதாக இருந்தது. குடிநீர், நீர்ப்பாசனம், தொழில்நுட்பம் போன்றவற்றில் ஏற்பட்ட விறுவிறுப்பும் வேகமும் கல்வி வளர்ச்சியிலும் ஏற்பட்டது. போதுமான நிதி ஒதுக்கீடுகளும் செய்யப்பட்டன. இதன் காரணமாக NLM வெகுசிறப்பாக தொண்டாற்ற முடிந்தது.

1950ல் "Each one Teach one" என்ற முழக்கம் ஒவ்வொருவர் வீட்டிலும் ஒலிக்கப்பட்டது. முழக்கத்தில் எழுந்த வேகம் செயலில் வெளிப்பட்டிருந்தால் இன்னும் பத்தாண்டுகட்கு முன்பே இப்பெரும்பணி நிறைவு பெற்றிருக்கும். ஆனால் அவ்வாறு நிகழவில்லை.

எனினும் நன்மைகள் விளையாமல் இல்லை. பள்ளிகளில் சேர்ந்து படிக்க வரும் பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகரித்து, பெண்கள் பொருளாதாரத்தில் தற்சார்புடையவர்களாக ஆக்குவதற்கான திறமைகளை வளர்க்கும் போக்கு அதிகரித்தது. மகளிர் நிலையில் உயர் வழிவகைகள் காணப்பட்டன. பல்வேறு சமுதாயங்களிடையே நல்லுறவை வளர்க்கும் வாய்ப்புகளுக்குத் தூண்டுகோலாக விளங்கியது. நாட்டில் நூற்றுக்கும் மேற்பட்ட பல்கலைக் கழகங்களில் முதியோர் கல்வி வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மையங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இதனால் கல்வி, எழுத்தறிவு பிழைப்புக்கான திறமைகள் ஆகியவற்றில் பயிற்சியளிப்பதன் மூலம் அண்டை அயலாரோடு நல்லிணக்கம் ஏற்பட்டு மக்கள் வாழ்க்கை இனிமையாக இருக்கும் என்று எதிர்பார்ப்பு இருந்தது. அரசுத்துறைகளும் அரசு சார்ந்த தனியார் தொண்டு நிறுவனங்களும் இம்முயற்சியில் இணைந்து செயலாற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

மக்கள், தங்களை இன்னும் சிறந்த குடிமக்களாகவும், நல்ல வளமுடையவர்களாகவும் உயர்த்திக் கொள்ள மேற்கொண்ட புதுப்புது உத்திகளையும் தொழில் நுட்பங்களைப் பற்றியும் ஆய்வோம். சில கல்வி நிறுவனங்களும் இவ்வாக்கப் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டன. இதில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட பயிற்சியாளர், வேடிக்கையாகவும், விளையாட்டாகவும் தான் கற்றுக் கொள்வதை உணர முடிந்தது. அதனால் மேலும் ஆர்வத்தோடு கற்கத் தொடங்கினார். தான் ஒன்றைக் கற்றுக் கொண்டதும் பிறரால் தான் மதிக்கப்படுவதை உணர்ந்தார். பெரிதும் மகிழ்ந்தர்ர். ஒரே சமயத்தில் கற்பதாகவும் களிப்பதாகவும் உணர்ந்தார். பள்ளிகளில் காணப்படும் இறுக்கம் இல்லாததால் முதியோர் கல்வி கண்ணீர் சிந்தாக் கல்வியாக விளங்கியது.

முதியோர் கல்வியில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளில் ஒன்று குசராத்தில் நடந்ததாகும். Self Employment Women's Association (SEWA) என்ற அமைப்பு குசராத்தில் முதியோர் கல்வியை வழங்கத் தொடங்கிய அவசியம் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டும். குசராத்தின் ஆலை ஊழியர்களின் மனைவி மக்கள் படும் துயரைக் கண்ட ஊழியர் ஆய்வாளர் (Labour Inspector) இலாபாட்(Ela Bhalt) என்பவர், உடனடியாக ஊழியர்கள் குடும்பங்களைப் பற்றிய அனைத்துப் புள்ளி விவரங்களையும் சேகரித்தார். அதிலிருந்து அவர்களுக்கு உடனடியான தேவைகள் யாவை எனக் கருத்தாக ஆராய்ந்தார். அவர்கள் வறுமையால் வாடினர். பல மணிநேரம் உழைத்துப் பின்பும் போதுமான உணவோ, உடையோ, உறைவிடமோ கிடைக்காமல் அல்லலுற்று அழுதனர். இம்மக்கள் கந்து வட்டிக்காரர்களிடம் சிக்கிக்கொண்டு மீள முடியாமல் மேலும் மேலும் ஏழைகளாயினர். படிப்பறிவின்மையால் வரவு செலவு விவரமில்லாமல் ஏமாந்து கொண்டிருந்தனர். இதை நன்கு ஆராய்ந்தறிந்து கொண்ட இலாபாட் உழைக்கும் பெண்களின் கழகம் (Self Employment Women's Association) ஒன்றை உருவாக்கினார். அவர்களிடையே விழிப்புணர்வை உண்டாக்கிக் கொஞ்சம் கொஞ்சமாக சேமிக்க வைத்துப் பின் மகளிர் வங்கி (Mahila Bank)தோற்றுவிக்க வழிகாட்டினார்.

தற்போது இவ்வங்கி பல நூற்றாண்டு ஆலமரம் போல் வளர்ந்துள்ளது. ஒரு இலட்சம் பெண்கள் இவ்வங்கியில் சேர்ந்து பயன் பெற்று வருகின்றனர். இதனால் தங்கள் பணத்தையும் இழக்காமல் நன்மதிப்பையும் இழக்காமல் பீடுநடை போடுகின்றனர். தொடக்கக் காலத்தில் கைரேகைகளை உருட்டி வரவு செலவு செய்த பெண்கள் நாளடைவில் எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டு விட்டனர். வீடியோ கேமராக்களை இயக்கவும் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இன்னும் சில மாதங்களில் அவர்கள் e-commerce மூலம் வரவு செலவு மேற்கொண்டாலும் வியப்பதற்கில்லை. தற்போது கூட சிலர் போதிய வருமானமில்லாமல் இருக்கலாம். ஆனாலும் கூனிக் குறுகிப் போகாமல் தலைநிமிர்ந்து உழைக்க கற்றுக் கொண்டு விட்டனர். வாழ்விலும் தாழ்விலும் தங்களை நன்னிலைக் கண் நாட்டிக் கொள்ளக் கற்றுக் கொண்டனர். SEWA ன் சேவையினால் தோற்றுவிக்கப்பட்ட "மகிலா வங்கி"யின் மாதிரியில் இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் மகளிர் வங்கிகள் தோற்றுவிக்கப்பட்டன.

தாம் ஒரு விதமான முறைசாராக் கல்விக்கு வித்திடுகிறோம் என்பதை உணராதவராய் திருஜம்பேகர்(Mr. Jambekar) வெட்டியாய்த் திரிந்து கொண்டிருந்த இளம் வயது சிறுவர்களைத் திரட்டி ஒவ்வொரு மாலையிலும் சிறுசிறு தொழிற்சாலை எந்திரங்களைப் பற்றிக் கற்பித்தார். அவரின் ஆர்வத்தையும் அக்கறையையும் உணர்ந்து அருகிலுள்ள பள்ளியில் அவர் கற்பிப்பதற்கு ஓர் அறை ஒதுக்கித் தரப்பட்டது.

நாளடைவில் அக்கம் பக்கத்திலுள்ள தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்களில் இவரிடம் பயின்றவர்கள் சிறந்தவர்களாகக் கருதப்பட்டனர். இவரிடம் பயின்றவரையே வேலைக்கு அமர்த்திக் கொள்ள விரும்பினர். தேவைப்படும் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க இவர் பள்ளியில் ஓர் அறையில் சொல்லிக் கொடுப்பதை விட்டுவிட்டு, தொழிற்சாலைகளுக்கே சென்று கற்பிக்கத் தொடங்கினார். இதனால் தொழில் நடத்தும் உரிமையாளர்களுக்கு வீண் செலவும், கால தாமதம் ஏற்படுவதும் தவிர்க்கப்பட்டது. நல்ல ஆதாயம் கிட்டியது.

ஆண்களுக்கு நிகரான அளவில் பெண்களுக்கும் கல்வி வழங்கி வருவதால் பல நன்மைகளும் ஏற்பட்டன. இது முற்றிலுமாக உணரப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. இதற்கு நல்ல எடுத்துக்காட்டு பெண் கல்வியினால் குடும்ப நலத்திட்டம் சிறப்பாக நிறைவேற்றப்படுவது ஆகும். சிறு குடும்பமே சீரான வாழ்வு என்ற கொள்கையைப் பெண்கள் மிகவும் ஆர்வத்தோடு ஏற்றுக் கொள்வதற்குப் பெண்கல்வியே காரணமாகும். கேரளத்துப் பெண்கள் நன்கு கற்றதால் சிறுகுடும்ப நன்மையை உணர்ந்தனர். அவர்கள் வாழ்க்கை முறையில் நல்ல மாறுதல்கள் ஏற்பட்டன. பெண் கல்வியை வழங்குவதில் இன்னும் சில இடங்களில் சிலர் தடைக்கற்களாய் விளங்குகின்றனர். பெண்கள் வீட்டு வேலைகளை மட்டும் செய்து கொண்டு வாழ்ந்தால் போதுமானது, எந்த விதமான கல்வியறிவும் அவர்களுக்கு வேண்டியதில்லை என்று கூறும் பத்தாம்பசலிகள் இன்றும் உள்ளனர்.

பெண்கல்வியை மிகவும் வலியுறுத்துவதற்கு ஆதாரமாக அடிநாதமாக விளங்கியது தேசியக் கல்விக் கொள்கையே ஆகும். கல்வி நல்கும் கட்டமைப்புகள் நீண்ட காலமாக இருபாலாரும் கற்பதற்கு, கற்றுப் பயன் பெறுவதற்கு சம வாய்ப்புகளைத் தரவில்லை. வாயில்களைத் திறக்கவில்லை என்பது எல்லோரும் அறிந்த உண்மை.

கல்வி வழங்குவதில் உள்ள பல்வேறு செயல்முறைகளில் பெண்களும் பங்கு பெறும் வண்ணம் பெண்களுக்குக் கல்வி அறிவு புகட்ட வேண்டும் என்ற எண்ணத்தின் விளைவால் கர்நாடகம், குசராத் மற்றும் உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் மகிலா சாமாக்யா (Mahila Samakhya) 1989ல் தோற்றுவிக்கப்பட்டது: கல்வியினால் மகளிர் சம உரிமை பெற்றவர்களாகத் திகழ வேண்டும் என்பதே இந்த அமைப்பின் நோக்கமாகும்.

இவ்வமைப்புகள் மூலம் மகளிரிடையே நல்ல விழிப்புணர்வு ஏற்பட்டது. குடிநீர் பெறுதல், குறைந்த பட்ச ஊதியம், உடல்நலம் பேணும் வாயில்கள், அரசுத்துறைகள் பற்றிய ஆய்வு, ஜவஹர்

வேலைவாய்ப்புத் திட்டத்தில் பெண்களுக்கு 30 விழுக்காடு ஒதுக்கீடு பற்றிய விவரம், கிராமப் பள்ளிகளின் செயல்பாடுகள், குழந்தைகளுக்குக் கல்வியின் அவசியம், வீட்டிலும் வெளியிலும் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் எனப் பல்வேறு பயனுள்ள விவரங்களை அறிந்து கொள்கின்றனர். விவரம் தெரிந்தவர்களாக விளங்குகின்றனர்.

1986ல் தேசியக் கல்விக் கொள்கையில்தான் "empowerment" என்ற சொல்லாட்சி முதல் முதலில் வழக்காற்றுக்கு வந்தது. பின்னர் இச்சொல் பலராலும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இச்சொல்லுக்கு முழுப்பொருள் என்ன?. "பெண்களைத் தற்சார்புடையவர்களாகத் தங்கள் உரிமைகளை நிலைநாட்டுபவர்களாகத் தேவைப்படும் போது தங்களுக்கு வேண்டியதைத் தாங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமையுடையவர்களாக, சுரண்டல் பேர்வழிகளிடமிருந்தும், தீங்கினரிடமிருந்தும் தற்காத்துக் கொள்ளும் நெஞ்சுரம் மிக்கவர்களாகத் தன்னை இரண்டாந்தரமாக, ஏளனமாக எண்ணுபவரைப் புறக்கணிக்கும் தெளிவு உடையவர்களாக" ஆக்க வேண்டும் என்பதே இதன் பொருள். மக்களாட்சி முறைகளால் அதிகாரப் பரவலாக்குதல் மூலம் பெண்கள் பங்கெடுத்துப் பணியாற்ற வேண்டிய பொறுப்புகள், அவர்களுக்குக் கிடைக்கும் வாய்ப்புகள் பெருகியுள்ளன. இதை எல்லா மட்டத்தினரும் வரவேற்கின்றனர். இந்தியாவில் கேரள மாநிலத்தில் மூன்று மக்கள் திட்டங்களிலும் (People's Planning) பெண்களுக்கு முன்னுரிமையுடன் வாய்ப்புகள் வழங்கப்பட்டதன் விளைவாக அம்மாநிலத்துப் பெண்கள் எல்லாத்துறைகளையும் அலங்கரித்துக் கொண்டிருக்கின்றனர்.

கேரள உள்ளாட்சி மன்றங்களில் ஏறத்தாழ 5078 பெண்கள் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இதுவரையிலும் எதிலும் நேரடியாகப் பங்கேற்க வழியில்லாமல் ஒதுக்கப்பட்டிருந்த பெண்கள் கேரளாவின் மக்கள் இயக்கத்தால் திட்டமிடும் நிலைக்கு

உயர்ந்துள்ளனர். மகளிரைக் கருத்தில் கொள்ளாமல் அவர்களுக்குரிய பங்கினை அளிக்காமல் நாட்டில் இனி எந்தத்திட்டத்தையும் நிறைவேற்ற இயலாது. திட்டமிடுதலில் ஒவ்வொரு கட்டத்திலும் பெண்களை ஈடுபடுத்த வேண்டும். நூற்றுக்கு நூறு மகளிர் நலன் பேணும் திட்டங்களைத் தீட்டி நிறைவேற்ற வேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்டுள்ளது வரவேற்கத்தக்க முன்னேற்றமாகும்.

ஊர்ச்சபைகளில் பெண்கள் நலன் பற்றிய கருத்தரங்கும் கலந்துரையாடலும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. கிராமங்களின் வளர்ச்சி பற்றிய அறிக்கைகளில் பெண்கள் முன்னேற்றம் பற்றித் தனியாக ஒரு அத்தியாயம் எழுத வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. மகளிர் மேம்பாட்டுக்கான செயல்திட்டங்களை வகுப்பதற்கென்றே தனி நிபுணர் பணிக்குழு ( Task Force) உள்ளது. இவைகள் பற்றிய விவரங்கள் யாவும் மகளிர் முன்னேற்றம் (Development Report) பற்றிய அறிக்கையில் காணலாம். வளர்ச்சிப் பணிகளில் பல நிலைகளிலும் பணியாற்றும் பெண் உறுப்பினர்கள் எவ்வாறு செயல்படுகின்றனர் என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள மிகவும் முன்னேற்றமடைந்த பகுதியில் சேவை புரியும் மற்றும் பின்தங்கிய பகுதியில் தொண்டாற்றும் பெண்களை ஒரு சேர ஆராய்ந்து பார்க்க வேண்டும். சிலர் வினாக்களின் அடிப்படையில் ஆய்வு மேற்கொள்ளலாம்.

இவர்கள் யார்? கிராம வளர்ச்சியில் அக்கறை உள்ளவர்களா?
இல்லாதவர்களில் இருப்பவர்களா?
எம்மதத்தைச் சார்ந்தவர்கள்?

எப்படிப்பட்ட சூழலில் எவ்வளவு வசதியான வீடுகளில் வாழ்கிறார்கள்?

உள்ளாட்சி மன்ற முடிவுகளில் தீர்மானங்களில் பங்கெடுக்கிறார்களா?

வேடிக்கை பார்ப்பவர்களாக உள்ளனரா?

அரசியலில் தனிப்பட்ட செல்வாக்கு உடையவர்களா?

பொதுநலப்பணிகளில், தேவைகளை உணருதல், திட்டமிடுதல், செயல்படுத்துதல், மேற்பார்வையிடுதல், மதிப்பிடுதல் ஆகிய எல்லா நிலைகளிலும் பங்கேற்கின்றவரா?

அவர்களுடைய கல்வியறிவு அல்லது எழுத்தறிவின்மை எந்த அளவிற்கு சம்பந்தமுடையதாக விளங்கியது?

இவ்வாறு மாநில மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் உள்ளூர் மட்டத்திலும் பரவலாக ஆய்வு மேற்கொண்டால்தான் பெண்களின் தொண்டாற்றும் திறன் பற்றி முழுவதுமாக மதிப்பிட முடியும்.

யாருக்குக் கல்வி தேவை? எப்பகுதி மக்களுக்குக் கல்வித் தேவை? எவ்வகையான சமுதாயத்திற்குக் கல்வி தேவை? எப்படிப்பட்ட கல்வி தேவை என்ற வினாக்களை எழுப்பிக் கொண்டு, அவைகட்குக் கிடைக்கும் விடைகளின் அடிப்படையில் பயனடைந்தவர்களைப் பற்றிய விவரப்பதிவுகள், உத்திகள், புதுமையான அணுகுமுறைகளால் ஏற்பட்ட விளைவுகள் ஆகியவைகளை நன்கு ஆராய வேண்டும். அவற்றின் விளைவாகப் புரிந்து கொண்டு தெளிந்து தேர்ந்து கொண்டவைகளை மனதில் வைத்துக் கல்வி வழங்கினால்தான் இனிக் கல்வி என்பது உண்மையிலேயே “தொடர் கல்வி” என்ற சொல்லுக்குப் பொருந்துவதாக இருக்கும்.

# இரகசிய வழியும் மனோன்மணீயமும்

- முனைவர் பெசுயம்பு

இலக்கியங்கள் மனித வாழ்வோடு தொடர்புடையவை. வாழ்க்கை நெறி, பண்பாடு, கலையொழுகலாறு, தத்துவம், அறிவியல் போன்ற பல்வேறு வாழ்வியற் கூறுகளால் அவை பின்னப்பெறுகின்றன. இக்கூறுகள் மொழி, நிலப்பரப்பு, இனம் ஆகிய எல்லைகளை மீறி, ஒன்றினிடமிருந்து மற்றதற்கு என்ற பரிவர்த்தனை இயல்பினால் பரவுகின்றன. இப்பரிவர்த்தனையே இலக்கியங்களை உலகப் பொதுவுடைமைகள் என்ற கருத்துக்கு உரிமையாக்குகின்றது. உலகப் பொதுவுடைமைகளின் பட்டியலில் இரகசிய வழி, (Secret way) மனோன்மணீயம் எனும் இரு படைப்புகளையும் இணைத்து ஆராயலாம்.

### கவிஞர் லிற்றன்

இரகசிய வழி லிற்றன் பிரபு (Lord Lytton)என்ற ஆங்கிலக் கவிஞரின் சிறிய கவிதைக்கதை இலக்கியம். மிலிற்றஸின் மறைந்த கதைகள் (Lost Tales of Miletus)என்ற இப்பிரபுவின் இலக்கியத் தொகுப்பில் இந்த இலக்கியமும் இடம்பெற்றுள்ளது.

அளவான - தேவைக்கேற்ற கதை மாந்தர் படைப்பு, மயக்கமற்ற - தெளிவான, ஒருவழிப் பாதையில் நேராகச் செல்கிற கதை நிகழ்வு, மனத்தைக் கொள்ளை கொள்கிற முருகியல் வருணனைகள் நிறைந்த செறிவான சொல்லாட்சி எனும் பண்புகள் லிற்றனைச் சிறந்த - திறம் வாய்ந்த கவிஞன் என்று பறைசாற்றுகின்றன. நிகழ்ச்சிகளை நிரலாகத் தொகுத்து, சுருக்கி, 780 அடிகளில் விளக்குகிறார் கவிஞர் லிற்றன்.

### இரகசிய வழியின் கதை

தானைஸ் (Tanais) ஆற்றின் வடபாலுள்ள சித்திய

நாட்டுக்கும் அதன் அண்டையிலுள்ள பாரசீக நாட்டுக்கும் இடையே எல்லைத்தாவா. அதனைக் காரணமாக்கிச் சித்திய நாட்டுத் தலைமைத் தளபதி சியுதஸ்(Seuthes) இரு நாடுகளுக்கும் இடையே போரை உருவாக்கி, பாரசீக மன்னன் சரியதசின்(Zariates) துணையுடன் தம் மன்னனை வீழ்த்திவிட்டு, ஆட்சியுரிமையைக் கைப்பற்றத் திட்டமிடுகிறான். இந்தத் துரோகத்திட்டம் சித்திய அரச குலகுரு தெலிசியஸ் (Teleuties) மற்றும் பாரசீக இளவரசனால் முறியடிக்கப்படுகிறது. குலகுரு விரும்பியவாறே சித்திய வாரிசாகிய இளவரசி அர்கியோப்(Argiope) பாரசீக மன்னனுக்கு மணம் செய்யப்படுகிறாள். பாரசீக மன்னனும் தான் நெடுநாட்களாகக் கனவில் கண்டு காதலுற்ற பெண்ணே தன்து வாழ்க்கைத் துணையாக வாய்த்தமைக்குப் பேருவகை கொள்கிறான்.

## இரகசிய வழி - பெயர்

இக்கதையில் தளபதியின் வஞ்சகத் திட்டத்தை ஏற்கெனவே அறிந்த குலகுரு தம் மன்னன் ஓமர்தசையும்(Omartes) அவனது மகளையும் காப்பாற்றும் பொருட்டு அமைத்த சுருங்கை வழி(Secret Way) முதன்மை பெறுகிறது. அரச வாழ்வில் அடுத்திருந்து கெடுப்பவர்கள் உறவாடுவது தவிர்க்கவியலாதது. எனவே அரண்மனையில் இரகசிய வழியை அமைப்பதும் இன்றியமையாதது. இந்த வழியே திடீரென உருவாக்கப்படுகிற தீங்குகளிலிருந்து அரச பரம்பரையை மீட்கவல்லது. அடுத்திருந்து கெடுக்கத் திட்டமிட்ட தளபதியால் முற்றுப்புள்ளி பெறவிருந்த ஓர் அரச பரம்பரை காப்பாற்றப் பெற்றதற்கு இவ்வழியே காரணமாகிறது. எனவே கவிஞர் இக்கதைக்கு இரகசிய வழி என்று பெயர் சூட்டியிருக்கிறார்.

## மொழியாக்கக் கதை

இரகசிய வழியின் கதை ஆசியப் பழங்குடி மக்களிடம் புகழ்பெற்ற புராணக் கதையிலிருந்து தத்தெடுக்கப்பட்டதாகும். இக்கதை நிகழ்ச்சிகளை அம்மக்கள் தங்கள் கோவில்கள், அரண்மனைகள்,

இல்லங்களில் ஓவியங்களாகத் தீட்டிப் போற்றினர். இக்கதையை ஆதேனஸ்(Athenaeus) என்ற நூலின் பதின்மூன்றாம் இயலில் (Book XIII c. 35) காணலாம் என்று லிற்றன் நாகரிகத்தோடும் பெருந்தன்மையுடனும் வெளிப்படையாகக் கூறுகிறார். மேலும், கதைப் பின்னலின் மெருகுக்கு ஏற்ப மூலக் கதையில் சிறிது மாற்றம் செய்துள்ளதாகவும் சுட்டுகிறார். இளவரசி ஓடதிஸ்(Odatis) இளவரசன் சரியட்ரஸ்(Zariadres) எனும் சித்திய மொழிப் பெயர்கள் முறையே அர்கியோப் என்றும், சரியதஸ் என்றும் மொழியாக்கம் செய்யப்பெற்றுள்ளன.

இக்கதை படைப்பாளி கூற்றாக அமைந்துள்ளது. ஆயினும் ஆங்காங்கே பரவலாகக் கதைமாந்தர்களின் உரையாடலும் இடம்பெற்று, நாடக அமைப்பினைப் பெற்றுள்ளது.

## இரகசிய வழியில் மனோன்மணீயம்

மனோன்மணீயம் தத்துவப் பேராசிரியர் பெ.சுந்தரம் பிள்ளையால் எழுதப்பெற்றது. தமிழ் மொழியில் புதிய வளம் சேர்த்தல் எனும் கடமை காரணமாக இந்நூலை இயற்றியதாக ஆசிரியர் முகவுரையில் குறிப்பிடுகிறார். மேலும், "தமிழில் வடமொழி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் உள்ளது போன்று அமைப்புடைய நாடகநூல் கிடைக்கவில்லை" என்றும், அக்குறையை நீக்குமாறு, "சிலகாலம் முயன்று வடமொழி முதலிய பாஷைகளிலுள்ள நாடக ரீதியைப் பின் தொடர்ந்து இயற்றிய 'மனோன்மணீயம்' என்னும் இந்நாடகம்" என்றும் கூறுகிறார். இவர் இந்நூற்கு எழுதிய ஆங்கில முகவுரை பின்வருமாறு தெரிவிக்கிறது. "Among the rich and varied forms of Poetic Composition extant in the Tamil language, the Dramatic type so conspicuous in Sanskrit and English, does not seem to find a place."

மனோன்மணீயத்தின் கதை இரகசிய வழியைத் தழுவிப் பின்னப்பட்டுள்ளது என்பதை ஆசிரியர் வெளிப்படையாகக் கூறுகிறார்:

"The plot of the play is based on one of Lord Lytton's Lost Tales of Miletus called secret way and for the sake of easy understanding the outline of that Scythian story as enlarged and adopted in this Dravidian play may be thus presented."

### கதைமாந்தர் ஒப்புமை

முதன்மைக் கதையைப் பொறுத்தவரை இரண்டிலும் ஒப்புமை காணப்படுகிறது. ஆனால் கதை மாந்தர்களின் பெயர்களை ஆசிரியர் சுந்தரம் பிள்ளை தம் விருப்பிற்கேற்பக் கருத்தாழத்துடன் அமைத்துள்ளார். சித்திய மன்னன் ஓமர்தஸின் இடத்தை ஜீவகன் பெறுகிறான். அவனது குலகுரு தெலிசியஸ் ஜீவகனின் குரு சுந்தரமுனிவர் ஆகிறார். இளவரசி அர்கியோப் தமிழ் நாடகத்தில் மனோன்மணி என்ற பெயரைப் பெறுகிறாள். பாரசீக இளவரன் சரியதஸே சேரமன்னன் புருசோத்தமன். சித்திய மன்னனின் தளபதி சியுதஸின் இடத்தில் ஜீவகனின் தலைமை அமைச்சன் குடிலன் வருகிறான்.

### கதையாக்கத்தில் கனவு - (இரகசிய வழியில்)

கதையாக்க உத்திகளுள் கனவு இரு நூல்களிலும் முதன்மை பெறுகிறது. நிலவுரிமை காரணமாக இருநாடுகளுக்கு இடையே உள்ள நீண்டநாள் பகையைத் தீர்க்கிற வழியாக வலிமை குறைந்த மன்னனின் மகளை வலிய மன்னன் மணந்து கொள்ளுதலை ஆசிரியர்கள் இருவரும் உணர்த்துகின்றனர். மணமகள் எதிரியின் மகள் என்று முன்னரே தெரியின் மணமுறிவு ஏற்படுதல் கூடும். அவள் மனத்திரையில் நிழலாடிக் காதலை வளர்த்தவளாயின், அவளை எய்திட வேண்டும் என்ற முனைப்புக் காரணமாக - ஏனைய விருப்பு வெறுப்புகளில் துறவு ஏற்பட்டு - நட்பு உருவாகும் என்பதை உணர்த்துகிற வகையில் இரு ஆசிரியர்களும் காதலை வளர்க்கிற உத்தியாகக் கனவைப் பயன்படுத்துகின்றனர். சித்திய இளவரசி அர்கியோப் பாரசீக இளவரன் சரியதஸின் கனவில் நெடுநாட்களாக

வந்து நிழலாடுகிறாள். அவள் யார்? எந்நாட்டவள்? என்பதை உணராத இளவரசன் அவளது பேரழகால் கவரப்பெற்றுக் காதல் வயப்படுகிறான். "இனிமையும் எழிலும் வாய்ந்த முகத்தை உடைய பெண்ணுருவம் ஒன்று நாள்தோறும் இரவில் கனவில் வருகிறது. அவளின்றேல் எனக்கு வாழ்வு இல்லை" என்று புலம்புகிறான்.

Sacred the trust, the king told his trouble
Know that each night ( thro' three revolving moons)
An image comes before me in a dream;
Ever the same sweet face
Lovely as that which best the carian slumber
Nought mid the dark - eyed daughters of the East,
Nought I have ever seen in waking hours,
Rivals in charm this shape
Which hath no life - unless a dream hath substance (268 - 276)

ஓமர்தஸ் தனது மகளின் மணம் குறித்துத் தூது அனுப்பிய போது, அவளை ஏற்க மறுத்து, எல்லைத் தாவாவைக் கிளப்புகிறான். பாரசீக மன்னன். ஓமர்தஸ் போரில் தோற்ற நிலையில், அவனது தளபதி வஞ்சமாக எதிரி பாரசீக மன்னனிடம் சரணடைகிறான். பாரசீக மன்னனின் மேலாட்சியை ஏற்று ஒரு சிற்றரசனாகச் சித்திய நாட்டை ஆளுதற்காகத் தளபதி சியுதஸ் மண்டியிடுகிறான். அவனது துரோகத் திட்டத்தை ஏற்காத சரியதஸ் துரோகி ஒருவனை ஆட்சிப் பீடத்தில் அமர்த்த மாட்டேன் என்று கூறி, அவனைக் கைது செய்து சுருங்கை வழியாகச் சித்திய அரண்மனைக்குள் நுழைகிறான். அங்கு மணமகனைத் தெரிவு செய்யும் நோக்கில் மணக் கோலத்தில் அர்கியோப் நின்று கொண்டிருக்கிறாள். அவளைச் சரியதஸ் காண்கிறான். தன் கனவில் வந்தவள் அர்கியோப் என்று உணர்கிறான். அவள் ஒயின் கிண்ணத்துடன் தன்னை நெருங்கியபோது, அவளைப் பாரசீக இளவரசன் சரியதஸ் அரவணைத்து மகிழ்கிறான்.

*கனவே! உன்னை எவ்வாறு இழந்திருந்தேனோ!*

O dream at last! at last! how I have missed thee (748)

*சரியதஸ் வியப்பால் ஆரவாரிக்கிறான்*

*'தெய்வங்கள் இரக்கமுள்ளவை'*

'The gods are merciful'

*அர்கியோப் மகிழ்ச்சியால் பூரிப்படைகிறாள். இருவரும் முத்தமழை பொழிகின்றனர்.*

*சரியதஸ் ஓமர்தஸிடம் தங்கள் மகளைக் கொடுத்து, இந்த ஒரு மகனை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கூறுகிறான். அவர் சித்திய நாட்டின் ஒரே வாரிசு என்பதால் மகன் என்று குறிப்பிடுகிறான்.*

*'பகைவன் மகள்' என்று மறுத்து ஒதுக்கப்பட்ட பெண்ணே கனவில் வந்தமையால், பகையை முறித்து உறவை அமைத்தவளாகிறாள். இவ்வாறு சுருங்கை வழியில் கனவு இன்ப முடிவுக்கான காரணியாகி முதன்மை பெறுகிறது.*

**கனவு (மனோன்மணீயத்தில்)**

*கனவின் இன்றியமையாமை மனோன்மணீயத்திலும் இன்ப முடிவுக்குக் காரணமாகவே அமைகிறது. மனோன்மணீயைப் புருசோத்தமன் கனவில் காண்கிறான்.*

*யார்கொலோ அறியேம் யார்கொலோ அறியேம்*
*வார்குழல் துகிலொடு சோர மாசிலா*
*மதிமுகங் கவிழ்த்து நுதிவேற் கண்கள்*
*விரக தாபத்தால் தரளநீர் இறைப்ப*
*----- -------- -------- --------- -------- --------*
*பித்துறச் செய்த இப்பேதை யார்கொலோ*
*எவ்வுலகினளோ அறியேம்------ ------ -------*
*------- --------- -------- -------- -------- ---------*
*நேற்றிராக் கண்ட தோற்றம் என்னெஞ்சம்*
*பருகினது ஐயோ ---- ------ ------ ------ (2: 3: 1 - 24)*

## தமிழ்க்காதல்

குடிலன் திருநெல்வேலியில் கட்டிய அரண்மனை எழிலைக் கண்டு உறங்கிய மனோன்மணியின் கனவில் புருசோத்தமன் வருகிறான். அவள் அவன்பால் காதல் கொள்கிறாள். காதற் காய்ச்சலால் துவள்கிறாள். ஆயினும் புருசோத்தமன் கனவுக் காதலியை நினைந்து புலம்பியதைப் போன்ற முயற்சியை ஆசிரியர் சுந்தரம் பிள்ளை மனோன்மணியிடம் மேற்கொள்ளவில்லை. தமிழ்ப்பண்பாட்டின் - தமிழ்க்காதலின் மரபு இங்குப் பேணப்படுகிறது.

இரகசிய வழியில் சரியதஸ் மட்டுமே கனவு வாயிலாக அறிந்து அர்கியோப்பைக் காதலிக்கிறான். கதை முடிவில் திருமணத்தின்போது அவள் பேருவகை கொள்கிறாள். இதன் வாயிலாக அவள் அவனை விரும்புதல் குறிப்பாக உணர்த்தப்படுகிறது. கதையாசிரியர் லிற்றன் அவ்விருப்பத்தை வெளிப்படையாக விவரிக்கவில்லை. ஆனால் அன்பின் ஐந்திணை - இருபுறக் காதலாகிய தமிழ் மரபைப் பேணுகிற நோக்கில் புருசோத்தமனும், மனோன்மணியும் ஒருவரை மற்றவர் கனவில் கண்டு, மனமாரக் காதலிக்கின்றனர். இங்கு ஊழ்வினையால் அமைகிற தெய்வப் புணர்ச்சி காதலுக்கு அடித்தளமாகிறது.

## அரண்மனை

இருநூல்களிலும் அரண் மிகுந்த புதிய அரண்மனை கட்டப்பெற்று, அதன் எழில் விரிவாக வருணிக்கப்படுகிறது. அரண்மனைகளில் அரச குடும்பத்தின் பாதுகாப்பிற்காகச் சுருங்கை வழி அமைத்தல் இரண்டிலும் இடம்பெற்றுள்ளது. தவிர, மனோன்மணீயத்தில் பாண்டியன் சீவகனை நாளடைவில் செயலற்றவனாக்கி, அரசுரிமையைத் தான் அடைதற்கு ஏற்ற உத்தியாக அமைச்சன் குடிலன் மதுரையிலிருந்து தலைநகரைத் திருநெல்வேலிக்கு மாற்றி அரண்மனையைக் கட்டுகிறான்.

## கதையோட்டத்தில் மாந்தர்கள்

கதை மாந்தர்களைச் சுற்றியே நிகழ்ச்சிகள் அமைகின்றன. எனவே சிறுகதை, புதினங்களைப் போன்று நாடகங்களுக்கும் இக்கதை மாந்தர்களின் படைப்புத்திறன் மிக இன்றியமையாததாகிறது. இம்மாந்தர்கள் கதையோட்டத்தோடு கோர்த்துச் செல்வராயின், கதை தொய்வின்றிப் படிப்பவரின் மனத்தில் ஆழந்த தோய்வை ஏற்படுத்தும். கதையோட்டதை விலகி, ஒரு கையில் ஆறுவிரல், ஏழுவிரல் இருத்தலைப் போன்று கதை மாந்தரால் நிகழ்ச்சி அமையுமாயின், அம்மாந்தரும் நிகழ்ச்சியும் மிகையாகி, படிப்பவருக்குச் சலிப்பை உண்டாக்கும்.

இரகசிய வழியில் தேவைக்கேற்ப மாந்தர் படைக்கப்பட்டிருக்கின்றனர். இது கவிதை நடையில் இருப்பினும் ஒரு சிறுகதை என்ற உணர்வினைத் தோற்றுவிக்கிறது. கதையோட்டத்தில் எதிர்த்தலைவன் (Villain) சியுதஸின் வஞ்சகத்திட்டம் உச்சம் பெற்றுக் கதைத்தலைவன் சரியதஸின் நற்பண்பினால் முறிக்கப்பெற்று வீழ்கிறது.

சித்திய மன்னன் ஓமர்தஸ் கள்ளங்கபடமற்றவன். குலகுரு தெலிசியஸின் அறிவுரையை ஏற்று, மகள் அர்கியோப்பைப் பாரசீக இளவரசனுக்கு மணம் செய்விப்பதன் வாயிலாக நெடுநாள் பகையை முடிவுக்குக் கொண்டுவர அவாவுகிறான். இது நிறைவேறினால் கதை நிகழ்ச்சியும் இதனுடன் முற்றுப்பெற்றுவிடும். ஆனால் சியுதஸின் திட்டம் காரணமாகக் கதை வளர்கிறது. பாரசீக மன்னன் அர்கியோப்பை மணந்தால் சித்திய நாடு அந்நியனுக்கு அடிமையாகிவிடும். அதனை மக்கள் எதிர்ப்பர். இராணுவக்கலகம் மூளும் என்று கூறி, ஓமர்தஸைத் தளபதி தடுக்கிறான்.

This marriage with the Made would leave to heirs remote the
Scythian Kingdom

Sow in man's minds vague fears of foreign rule,
Which might, if cultured, spring to armed revolt

In armed revolt how oft
Kings disappear, and none dare call it murder(143-148)

போர் மூள்கிறது. ஓமர்தஸ் தோற்கிறான். தனது மேலாண்மையை ஏற்றுக்கொண்டதன் அறிகுறியாக ஒரு குவளைச் சித்திய நாட்டுச் சுனை நீரையும் ஆறு கிரெய்ன் மணலையும் திறையாகத் தருமாறு சரியதஸ் கேட்கிறான். தன்மானம் ஓமர்தஸைத் தடுக்கிறது. மீண்டும் போர். சித்தியத் தளபதி சுருங்கை வழியாகச் சென்று சரியதஸைக் கண்டு பேரம் பேசுகிறான். அதற்குப் பாரசீக மன்னன் சரியதஸ் ஒரு துரோகியை அரியணையில் அமர்த்தமாட்டேன் என்று மறுக்கிறான்.

But I will place no traitor on a throne
Yet, since thy treason sows me many lives
I for their sake spare thine; (641-643)

சரியதஸ் தளபதியைக் கைது செய்து ஓமர்தஸிடம் அழைத்து வருகிறான். இவ்வாறு கதை வளர்ச்சியில் எதிர்த்தலைவன் முதன்மை பெறுகிறான்.

## மனோன்மணீயம் - கதை இலக்கியம்

மனோன்மணீயம் இந்திய இலக்கிய மரபை ஒட்டிய விவரிப்புக் கொள்கைகளையும் கதை அமைப்பினையும் கொண்டு பின்னப்பட்டுள்ளது. இதனை முகவுரையில் சுந்தரம்பிள்ளை கூறுகிறார். எனவே இதில் பழைய புராண, காப்பியங்களின் சாயல் படர்ந்துள்ளது. இதன் விளைவாகச் சில கிளைக்கதைகளும் கதை மாந்தர்களும் மிகையாகப் படைக்கவேண்டியவாயின. இந்தக் கொள்கையே இந்நாடகத்தை மேடை நாடகம் என்ற தகுதியிலிருந்து கதை இலக்கியம் என்ற தகுதிக்கு இழுத்துச் சென்றுள்ளது.

## கனவு நனவாகிறது

மனோன்மணீயத்தின் முதன்மைக்கதை இரகசிய வழியின் கதையை ஒட்டியது. எனவே முதன்மைக் கதை மாந்தர்களைச் சுற்றி அமைகிற நிகழ்ச்சிகளும் அத்தன்மையினவே. இக்கதையிலும் வஞ்சக

அமைச்சன் குடிலனின் திட்டங்களே கதையை வளர்க்கின்றன. மனோன்மணீயைச் சேரமன்னன் புருசோத்தமன் மணம் செய்த பின் பாண்டிய அரசுரிமையைக் கைப்பற்றுகிற தன் எண்ணம் நிறைவேறும் என்று குடிலன் கருதுகிறான். புருசோத்தமன் திருமணம் பேசுகிற தூதனாகத் தன்மகன் பலதேவனைத் தெரிவு செய்து, ஜீவகன் கருத்துக்கு மாறாக நிபந்தனை தாவாவைப் புருசோத்தமனிடம் கிளப்பி, போரை மூட்டுகிறான். ஜீவகன் தோற்கிறான். புருசோத்தமன் ஒரு குவளைத் தாமிரபரணி நீரையும் வேப்பமாலையினையும் திறையாகக் கேட்கிறான். மீண்டும் போர் மூள்கிறது இறக்கும் முன்னர் மனோன்மணியின் திருமணத்தைப் பலதேவனுடன் நடத்தும் நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

சுருங்கை வழியாகச் சென்ற குடிலன் தற்செயலாகப் புருசோத்தமனின் பாசறையை அடைகின்றான். புருசோத்தமனிடம் சரணடைகிறான். ஜீவகனை வென்று, தன்னைப் பாண்டிய நாட்டுக்கு ஒரு சிற்றரசனாக அங்கீகரிக்குமாறு கெஞ்சுகிறான். சேரமன்னனோ குடிலனைக் கைது செய்து, சுருங்கை வழியாக ஜீவகனிடம் வருகிறான் அங்கு மணக்கோலத்தில் நின்று கொண்டிருந்த தனது கனவுக் காதலி மனோன்மணீயைக் கண்டு, அரவணைக்கிறான். கனவு நனவாகிறது

## இந்திய இலக்கிய மரபு

மனோன்மணீயில் வருகிற வாணி, நடராஜன், நாராயணன். பலதேவன் போன்ற கதை மாந்தர்களைச் சுற்றிக் கிளைக் கதைகள் படர்ந்துள்ளன. வாணி-நடராஜன் காதல், ஜீவகனின் தோழன் நாராயணனைக் கழுவேற்றும் முயற்சி பலதேவனது கள்ளக் காதல் ஆகிய கிளைக்கதைகள்.

தோழி வாணி சிவகாமி சரிதம் என்ற ஒரு கிளைக்கதையை மனோன்மணிக்குக் கூறுகிறாள். இக்கதை வேக்பீல்டு போதகர் (Vicar of Wakefield) என்ற ஆங்கிலப் புதினத்துள்ள பாடற்கதையின் தமிழாக்கம் என்பர். இக்கிளைக்கதை இதிகாசங்களிலும் புராணங்களிலும் இடம்பெறுகிறது. தத்துவத்தின் சாரமாகக் கருதப்படுகிற கீதையைப் போன்றது. இக்கதை சைவ சித்தாந்தத்தின் பிழிவாகக் கொள்ளப்படுகிறது.

## சைவசித்தாந்த விளக்கநூல்

மனோன்மணீயத்தைச் சைவ சித்தாந்த விளக்க நூலாக ஆசிரியர் சுந்தரம்பிள்ளை கருதுகிறார். இதனை முகவுரையில் அவரே குறிப்பிடுகிறார். கதை மாந்தர்களும் மனோன்மணீயம் என்ற நாடகப்பெயரும் சைவ சித்தாந்தத்திற்கு விளக்கமாக அமைந்தவையே. உருவக மாலையாகக் கொள்ளுங்கால், ஜீவகனைச் சார்போதமான ஜீவாத்மா ஆகவும், அவனைத் தம் வசப்படுத்தி யாட்டுவித்த குடிலனை மாயாசக்தியாகவும், மனோன்மணியை ஜீவாத்மாவின் பரிபக்குவ காலத்துதிக்கும் முத்திக்குரிய உத்தமபாகமான சுத்ததத்துவமாகவும்.............. புருசோத்தமனை அனுக்கிரஹ சக்தியாகவும்...........மதுரையை ஜீவாத்மா உதித்தொடுங்கும் மூலஸ்தானமாகவும்............. திருநெல்வேலிக் கோட்டையை மாயா காரியமான அன்னமயாதி பஞ்ச கோசத்தாலமைந்த சரீரமாகவும்..............பாவித்து உய்த்துணர்ந்து கொள்க' ஜீவகன், சுந்தரம், மனோன்மணி, புருஷோத்தமன் என்ற கதை மாந்தரின் பெயர்த்தேர்வும் குறியீடுகளாகத் தத்துவ உள்நோக்கம் கொண்டதே.

## மேடை நாடகமா?

மனோன்மணீயம் மேடையில் நடிப்பதற்காக அன்றி, படிப்பதற்காகப் படைக்கப்பட்டது என்பதை ஆசிரியர் பின்வருமாறு கூறுகிறார்.

The play here submitted, it is needless to say, is meant for the study room and not the stage, and it is therefore written in the literary and not altogether the colloquial dialect.

மனோன்மணீயம் இரகசியவழி என்ற வேற்றுமொழி இலக்கியத்தின் தழுவல். ஆயினும் தமிழ் நிலத்திற்கு ஏற்ப அந்த விதை முளைத்துச் செடியாகி, தமிழ் மணம் வீசுகிறது.

# ஓர் இயற்றமிழ் மாணவனின் கல்வெட்டுப்பார்வை - 1

- அ.மா.பரிமணம்

தமிழில் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டன எனக் கருதப்பெறும் சங்க நூல்களைப் பிழையின்றியும் தங்கு தடையின்றியும் படித்தறிவதற்கு இயல, ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட காலத்தில் தமிழகத்தை ஆண்ட மாமன்னன் இராசராசன் வாய்மொழியாகக் கூறக்கேட்டு வரையப்பெற்ற தமிழ் ஆணை இன்று நம்மால் எளிதில் படித்தறிய இயலாதிருப்பதனை நோக்குங்கால் அது வியப்பாகத் தோன்றலாம். நம் தமிழ் மொழி வழங்கி வந்த வரலாற்றினை அறிய முற்படும்போது அதில் வியப்பதற்கொன்றுமில்லை. என்பது புலனாகும்.

திருவள்ளுவர் காலம் எதுவாயினும், ஏதோ ஓராற்றலால், அவர் எழுதிய திருக்குறள் ஏட்டுடன் நம்முன் வந்து உரையாடுவதாகக் கற்பனை செய்வோம். 'எந்தத் தமிழ் மக்களை உளத்திற்கொண்டு உலகப் பேரற நூலினை வடித்தோமோ அந்தத் தமிழ் மக்களின் வழித் தோன்றல்களாக இத்தமிழ்மக்கள்' என்று அவரும் ' வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என வியந்து போற்றுமளவு உலகப் பொதுமறையினை வழங்கிய வள்ளுவர் பெருமான் இவர்தாமோ என்று நாமும் ஐயுறுமாறு, இருசாரார்க்குமிடையே நடையுடை பழக்க வழக்கங்கள் போன்றவற்றில் மாறுபாடுகள் மலிந்திருப்பதனைக் காணலாம். அவர் பேச்சின் பெரும்பகுதியினை நாமும், நம் பேச்சின் சிறு பகுதியினையே அவரும் புரிந்து கொள்ளக்கூடும். அவர் கையிலுள்ள திருக்குறள் ஏட்டினை நாமும், நம் கையிலுள்ள திருக்குறள் ஏட்டினை அவரும் பெற்றுப் படிக்கத் தொடங்கினால், ஒரு சொல்லைக்கூட - ஏன் ஒரு எழுத்தினைக் கூட இருசாராராலும் படித்தறிய இயலாது. இதற்குக் காரணம். திருத்தமான ஒலிவரையறை பெற்ற தமிழ் மொழியில், காலப்போக்கில், கலந்துவிட்ட பிற மொழி ஒலிகளின் கலப்பும் ஆதிக்கமுமே ஆகும். மற்றுமொரு மறுக்கவியலாத காரணம், தமிழ் மொழியின் வரிவடிவில் காலங்கள்தோறும் ஏற்பட்ட வரிவடிவ மாற்றங்களும், சில

வேற்றுமொழிகளின் வரிவடிவ நுழைவும் நுழைப்பும் ஆகும்.

தமிழகத்தில் பண்டு தொட்டு எழுதுதற்குப் பயன்பட்டு வந்த சாதனங்கள் ஏடும் எழுத்தாணியுமாகும். ஏடு என்பது ஒரு வகைப்பட்ட பனை ஓலையின் பதப்படுத்தப்பட்ட பகுதியாகும். வாழை இலையின் ஒரு பக்கத்துப் பகுதியினை இன்னும் ஏடு என்று குறிப்பிடக் காணலாம். பதப்படுத்தி ஒழுங்குபடுத்தப்பட்ட பனையோலையின் ஒரு புறத்திலோ இரு புறங்களிலுமோ எழுத்தாணியால் பொறிக்கப்படுவது ஏடெனப்பட்டது. பல ஏடுகள் கொண்டு அமைக்கப்பட்ட தொகுதி நூல் எனப்பட்டது. "முக்காற் கேட்பின் முறை அறிந்து உரைக்கும்" என்னும் நன்னூற்பாயிரப் பகுதியில் இடம்பெறும் ஒரு நூலினைக் குறிக்கும். செய்திகள் தாங்கி வருதலின் ஓலை என்பது இக்காலக் கடிதம் எனும் பொருளிலும் வழங்கப்பட்டதனை, 'மன்னுடை மன்றத்து ஓலைத் தூக்கினும்' என்னும் நன்னூற்பாயிரப்பகுதியால் அறியலாம்.

பண்டு அரசாணைகள் தூரிகை கொண்டு துணியிலும் (கிழி) எழுத்தாணி கொண்டு ஓலையிலும் வரையப்பெற்றன. அவை எவ்வளவு கவனமாகப் பாதுகாக்கப்பட்டபோதும், ஒரு குறிப்பிட்ட க்ாலங்களுக்கு மேல் பயன்படுத்த இயலாத நிலையினை எய்திவிடக் கூடும். அதனால் நீண்ட நெடுங்காலம் ஆணை அல்லது கொடை(grants) நிலைத்து நின்று பயன்தர வேண்டியதொன்றாயினும், பொதுமக்கள் அறிந்து காக்கக் கடமைப்பட்டதொன்றாயினும், அதனை அளித்த கொடையாளர் (அரசன், அரசியார், மேனிலை அரசியலதிகாரி) கொடையளித்த போதே அதனைக் கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்க என்று அனுமதி ஆணை வழங்கும் வழக்கம் இருந்துள்ளதனைக் கல்வெட்டுக்களில் காணமுடிகின்றது. "-இப்படி செய்து குடுக்க வென்று திருவாய் மொழிந்தருளித் திருமுகம் பிரசாதம் செய்தருளி வந்தது. தாம்ரசாசனம் பண்ணிக் குடுக்கவென்று சந்து விக்ரஹிகள் ராஜவல்லபப் பல்லவரையரும் அதிகாரிகள் இராசேந்திர சிங்க மூவேந்த வேளாரும் சொல்ல, இத்தாம்ர சாசனம் எழுதினேன் உட்க்கோடி விக்ரமாபரணத் தெரிந்த வலங்கை வேளைக்காரரில் நிலையு உடைய பணையான் நிகரிலிசோழன்

மதுராந்தகனேன். இவை என் எழுத்து. (சிறிய லெய்டன் பட்டயம்) "........இப்படி சந்திரா தித்தவற் செல்வதாக கல்லிலும் வெட்டுவித்துக் கொள்க என்று திருவாய் மொழிந்தருளினபடிக்கு, இவை திருமல்லி நாட்டு தடங்கண்ணிச் சிற்றூருடையான் சோறன் உய்ய நின்றாடுவானான குருகுலத்தரசன் எழுத்து" (மாறவர்மன் சுந்தரபாண்டியன் I கல்வெட்டு. "ஆயிரப்புரவினால் உதயசந்திர மங்கலத்தாய்கேய் கூட இப்பரிசேய் அறையோலைப்படி சாசனம் செய்வித்துக் குடுத்தோன் செம்பியன் மாவலிராயனேன்". (உதயேந்திரம் செப்பேடுகள் S.II. Vol II.பக்கம் 386))

ஒருவர் ஒப்பந்தம், ஆணை, கொடை அறிவிப்புப் போன்றவற்றை வழங்கும்போது அவற்றிற்காக வரையப்பெறும் ஆவணம் (சான்றளிப்பார் இசைவுக் கையொப்பத்தொடு அமைவது) மூல ஓலை எனப்படும் என்பதனைச் சேக்கிழார், தம்நூலில், சுந்தரர் வரலாறு கூறுங்கால், சுந்தரரை ஆட்கொள்ள வந்த முதிய அந்தணர் கூற்றில் வைத்து, 'ஆதியில் மூல ஓலை காட்டி நீ அடிமையாதல் சாதிப்பன்' என்று காட்டியுள்ளார்.(பெ.பு. தடுத்தாள்-49) திருக்கோயில், ஊர்ச்சபை போலும் செய்திகளாயின் கல் அல்லது செம்பில் பொறித்துக் காக்கப்பெறும். காலப்போக்கில் மூல ஓலைகள் அழிந்துபடக்கூடும். பழமைச்சிறப்பு வாய்ந்த தஞ்சைப் பெருங்கோயில் முதலிய தமிழகக் கோயில்களின் சுவர்களிலும், லெய்டன் பட்டயங்கள், காசாக்குடிச் செப்பேடுகள், வேலூர்ப்பாளையம் செப்பேடுகள், வேள்விக்குடிச் செப்பேடுகள் போன்றவற்றிலும் காணப்படும் பொறிப்புக்கள் அனைத்தும் இவ்வகையில் அமைந்தனவேயாம். இப்பொறிப்புக்கள், பொறிக்கப்பட்ட காலத்தில், தமிழ் மொழியின் எந்த வரிவடிவில் பொறிக்கப்பட்டனவோ அதே நிலையில் மாறுதல் இன்றிக் காணப்படுவதால், காலத்தால் மாறுபட்டு வந்துள்ள தமிழின் வரிவடிவத்தில் பயின்ற நம்மால் அவற்றைப் படிக்க முடியவில்லை. செப்பேடுகள் மண்ணுள் புதையுண்டிருந்த போதிலும், அவற்றின் எழுத்துக்களில் சிதைவு தோன்றுவதற்கு வாய்ப்புக் குறைவாகும். கல்லிலாயின் தட்பவெப்ப நிலை, மக்களின் அறியாமை போன்றவற்றால் சிறிய அளவில் சிதைவு அல்லது அழிவு ஏற்பட

வாய்ப்புண்டு. எடுத்துக்காட்டாக ஒன்று கூறலாம். சங்க காலத்தில் வீரர்க்கான நடு கற்களை வண்டிகள் செல்லும் வழியின் மருங்கிலும் அமைக்கும் வழக்கம் உண்டு. உமணர் உப்பினை ஏற்றிச் சென்ற வண்டி உருளைகளின் நடுவிலுள்ள அச்சுமுனைகள் சில சமயங்களில் வழியின் ஓரமாகச் செல்லும்போது, அங்கு நடப்பெற்றுள்ள நடுகல்லின் மீது உராய்ந்து செல்லும் நிலை உண்டாகலாம். அவ்வாறு சென்றபோது வண்டிக்கடையாணியின் கீறலால், நடுகல்லின் எழுத்துக்கள் சிதைந்துபோயின. அதனால் அதனைப் படிப்போர் பொருளையறுபட்டுப் படித்து மயங்கும்போது உண்டாகியதனை அகநானூற்றுப்பாடல் ஒன்று பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

"..........உமண் மகன் பேரும் பகுதிப்
புன்தலை சிதைத்த வன்தலை நடுகல்
கண்ணிவாடிய மண்ணா மருங்குல்
கூர்உளிகுயின்ற கோடுமாய் எழுத்துஅவ்
ஆறு செல் வம்பலர் வேறுபயம் படுக்கும் (அகம் 343 4-8)

புலவர்களால் காலங்கள் தோறும் தோற்றுவிக்கப்பெற்ற தனிப் பாடல்கள், சிற்றிலக்கியங்கள், காப்பியங்கள் போல்வன, படைப்பாளர்களின் தனியுடைமைச் சொத்துக்களாகும். அவற்றைப் பயின்று பயன்பெற விரும்பும் மக்களின் புலமைச் சொத்துக்கள். பெரும்பாலும் ஆசிரியர் மாணவர் வழியாக அச்சொத்துரிமை இறங்கும். ஒரு புலவரின் படைப்பு அவருடைய பிள்ளைகளும் படைப்பில் ஆர்வமுடையவர்களாயின் அவர்கட்குப் பயன்படக்கூடும். இல்லையேல் ஓலைச் சுவடிக்கற்றையாகப் பரண்களில் அடைக்கலம் புக நேரும். மாணவர்களோ விரும்பும் மற்றவர்களோ அவற்றைப் பயன்படுத்தலாம். பொதுமக்கள் சொத்துக்கள் ஆகாமையான், அவை கல்லிலோ செம்பிலோ பொறிக்கப்படுவதில்லை. (சமய ஈடுபாட்டினால் சிராப்பள்ளி அந்தாதி, திருவிடைவாய்ப்பதிகம் போல்வன கோயிற் சுவர்களில் பொறிக்கப்பட்டுள்ளன) இலக்கிய ஓடுகள் சிதையும் நிலை அடைந்தாலோ, யாருக்கேனும் தேவைப்பட்டாலோ அவ்வக்காலத்தில் வழங்கிய தமிழ் வரிவடிவில் பெயர்த்து எழுதிக் கொள்ளப்பட்டன.

(தொடரும்)

# மக்களாட்சி வளர்ந்த வரலாறு

பா.சூரியநாராயணன்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

## அலுவலர்கள்

மேற்கூறிய நிறுவனங்களைத் தவிர, அலுவலர்கள் பலர் அமர்த்தப்பட்டிருந்தனர். அவர்கள் ஆர்க்கன் (9பேர்), படைத்தலைவர்கள் (10பேர்), நிதி அலுவலர்கள் (30பேர்), அரசாங்கக் கணக்குத் தணிக்கையாளர்கள், சாலை அதிகாரிகள், நிறைபடிகளைச் சரிபார்ப்போர், சிறை அலுவலர், சமய அலுவலர், கல்வி அலுவலர், துறைமுக அலுவலர் எனப்படுவோர். படைத்தலைவர்களும், தண்ணீர் வழங்கும் அலுவலரும் மட்டும் இவற்றுக்குரிய தொழிலறிவுடை யோரிடமிருந்து தேர்ந்தெடுக்கப் பட்டனர். மற்றெல்லா அலுவல்களுக்கும், ஏறக்குறைய 95 சதவிகிதம் ஆட்கள் திருவுளச்சீட்டு முறைப்படி ஓராண்டுக் காலத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவ்வலுவல்களுக்குத் தகுதியும், நாணயமில்லாதவரும் வருவதைத் தடுப்பதற்காக அதீனியர் 2 தற்காப்புகளை வகுத்திருந்தனர். திருவுளச்சீட்டு முறையில் எவரும் அலுவலுக்கு வரும்போது ஒரு தேர்வுக்கும், ஓராண்டு அலுவற்காலம் முடிந்தபின்னர் ஒரு தேர்வுக்கும் உட்படுதல் வேண்டும். இவ்வாறு அலுவற்காலத்தை ஓராண்டாக வகுத்தும், திருவுளச்சீட்டு முறையைப் பின்பற்றியும், அலுவல் ஏற்பதைத் தங்களுக்குள் முறைவைத்தும் அதீனியர் மக்களாட்சி அரசாங்கத்தை நடத்தினர். எனவே வரலாற்றாசிரியர்கள், வயதுவந்த 30,000 குடிமக்களடங்கிய ஆதென்ஸ் நகரரசில் ஏறக்குறைய 1900பேர் ஆண்டுதோறும் ஆட்சிப்பணிகளைச் செய்தனரென்று கூறுகின்றனர். ஆகையால் 1900 பணிகள் எல்லா அதீனியக் குடிமக்களிடையேயும் 16 ஆண்டுக்கு ஒருமுறை சுற்றி வந்தன. ஒவ்வொரு அதீனியக்குடி மனிதனும் தன் வாழ்நாளில் ஏதாவதொரு அரசாங்கப் பணியை ஓராண்டுக்காயினும் செய்யும் வாய்ப்பு இருந்தது.

## முடிவுரை

அதீனியக் குடிமக்கள் இனம், மொழி, பண்பு முதலியவற்றில் ஒருமைப்பாடு உடையவராகையால், அளவில் சிறிய நகரரசில் நேர்முக மக்களாட்சி வெற்றியாக நடந்தது. திறமிக்க அதீனியத் தலைவர்

பெரிக்ளீஸ் ஆட்சிக்காலத்தில் (கி.மு.459-429) அதீனிய மக்களாட்சி புகழ்பெற்றிருந்தது. வாணிபம், தொழில்கள், இலக்கியம், சிற்பம், இசை, ஓவியம் முதலிய துறைகளிலும் சிறந்து விளங்கிற்று.

இவ்வளவு சிறப்புக்கள் பண்டைய அதீனிய மக்களாட்சியில் இருந்தாலும், அதிலிருந்த குறைகளை, அடிமைகள் வகுப்புப் பெண்களுக்கு உரிமை மறுப்பு, வெறும் பேச்சுவாதத்தால் வழக்காளிகளுக்குத் தீர்ப்பு வழங்குதல் முதலியவைகளையும் சுட்டிக்காட்டுதல் வேண்டும். மேலும், நேர்மையற்றோரெல்லாம் திருவுளச்சீட்டு முறையின் மூலம் பொறுப்பான உயர்பதவிகளுக்கு வந்து, நாட்டுக்குப் பல இழப்புக்களை உண்டாக்கினர். ஸ்பார்ட்டாவினால் ஆதென்ஸ் தோல்வியடைந்தது. ஸ்பார்ட்டாவும், அடுத்துவந்த தீப்சும் மிகச்சிறிய காலத்துக்கே கிரீசின் தலைமை பெற்றிருந்தன. இறுதியில் மாசிடோனியாவின் வலிய படைத்தலைவர்கள் பிலிப், அலெக்சாண்டர் ஆகியோரின் வெற்றிகளுக்கெதிராக கிரேக்க நகரரசுகள் தங்களுடைய சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ள இயலாமல் கி.மு.338ஆம் ஆண்டிற்குப் பின்னர் மறைந்தன, பின்னர் ரோமானியப் பேரரசின் மாகாணங்களாகிவிட்டன.

கிரேக்க நகரரசுகள் இக்கால மக்களாட்சி முறை வளருதற்கேற்ற நல்ல சில கருத்துக்களை அளித்துள்ளன. நாட்டின் சட்டமே அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் தலைமையானது(Law in Supreme) இக்கால சருவாதிகார அரசுகளைத் தவிர மற்றவை எல்லாம் இக்கருத்தை ஏற்று இயங்குகின்றன. பிளேட்டோ, அரிஸ்டாட்டில் முதலிய சிந்தனையாளர் முடியாட்சி, உயர்குடியாட்சி, செல்வராட்சி, சருவாதிகார ஆட்சி, மக்களாட்சி முதலியவற்றின் கருத்துக்களை ஆய்ந்து, சீர்தூக்கிப் பார்த்து, அவற்றின் சிறப்புக்களையும், குறைபாடுகளையும் எடுத்துக் காட்டியுள்ளனர். கிரேக்கர் ஒருமை அரசு(Unitary State) கூட்டரசு(Fedaral State) முதலியவற்றை அறிந்திருந்தனர். அரசியற் புரட்சிகளுக்குக் காரணம் குடிகளுக்கு சமத்துவமடைதலில் (Equality) பெரும் ஆர்வமிருப்பதே ஆகும். ஆகையால் புரட்சியைத் தடுத்தற்கு நாட்டின் அரசியலமைப்பில் ஈடுபாடு உண்டாவதற்காக யாவருக்கும் அரசியலமைப்பைப் பற்றிக் கல்விப் பயிற்சி அளித்தலே ஆகும் என்று அரிஸ்டாட்டில் கூறுகிறார்

அன்பு அச்சகம், மதுரை-1. ☏ 741116